[2017 ஜனவரி 30

மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**13—**

**புதிய கட்டடம்**

***125—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரியில் உள்ள மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரியிலே மின் வாரியத்தின் சார்பாக முதன்மை அலுவலகமான மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்காக மாண்புமிகு அம்மா அவர்களால் ஏற்கெனவே 4 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது; ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்திலே மின் வாரியப் பணிகளைச் செவ்வனே நடத்திடவும், பொது மக்கள் நலன் கருதியும், S.E. அலுவலகம் ஒன்றும், D.E. அலுவலகங்கள் மூன்றும், A.D. அலுவலகங்கள் 13–ம், A.E. அலுவலகங்கள் 60–க்கும் மேலும், Section அலுவலகங்கள் 100–க்கும் மேலும், அதற்கும்மேல், C.A.D.I., M.R.T. என பல்வேறு அலுவலகங்களும் இயங்கி வருகின்றன.

இவற்றிலே S.E. அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்திலும், D.E. அலுவலகங்களிலே 3—ல் 2 வாடகைக் கட்டடங்களிலும், A.E. அலுவலகங்கள் கிட்டத்தட்ட 80% வாடகைக் கட்டடங்களிலும், Section அலுவலகங்கள் கிட்டத்தட்ட 60%—க்கு மேல் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருவதால், பொது மக்கள் மிகவும் சிரமப்படுவதோடு, மின் வாரிய அலுவலர்களும் இடவசதியின்றி மிகவும் சிரமப்படுகிறார்கள். இதன் காரணமாக பணிகளும் செவ்வனே நடைபெற முடியாத சூழ்நிலை உள்ளது. இதற்காக மாதா மாதம் பல இலட்சக்கணக்கான ரூபாய் மின் வாரியத்திடமிருந்து வாடகையாகக் செலுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது. வாடகையாகச் செலுத்தும் பணத்தைக் கொண்டே ஆண்டிற்கு இரண்டு, மூன்று சொந்தக் கட்டடங்களைக் கட்டிவிடலாம். ஆக, முதற்கட்டமாக, கிருஷ்ணகிரியிலே வாடகைக் கட்டடத்திலே செயல்பட்டுவரும் S.E. அலுவலகம் மற்றும் D.E. அலுவலகங்கங்களுக்கு சொந்தக் கட்டடங்களைக் கட்டித்தரும் திட்ட செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் மூலமாகக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, S.E. அலுவலகம் கட்டுகின்றபோதே அதனுடன் சேர்த்தே D.E. அலுவலகம் அமைக்கப்பட்டுவிடும். அதற்காகத்தான் நான்கு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், Section அலுவலகத்தைப் பொறுத்தவரையில் 60%—க்கு மேல் வாடகைக் கட்டடத்திலும், A.E. அலுவலகங்கள் 80% வாடகைக் கட்டடத்திலும் இயங்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். உறுப்பினருக்கு யாரோ தவறான தகவல்களைக் கொடுத்திருக்கிறார்கள். அங்கு மொத்தமுள்ள 731 மின் வாரிய அலுவலகக் கட்டடங்களில், 587 கட்டடங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் நிலையில், 144 மட்டும்தான் வாடகைக் கட்டடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மீதமுள்ள வினாக்கள் நாளை எடுத்துக்கொள்ளப்பெறும். வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.